## விண்மீன் நடப்பு நிகழ்வுகள்

1) 2019 ரஞ்சி கோப்பையை வென்ற அணி எது?

A] விதர்பா

B] சௌராஷ்டிரா

C] வங்காளம்

D] ரயில்வே அணி

- ✓ பிப் 7 அன்று நாக்பூர் விதர்பா கிரிக்கெட் சங்க மைதானத்தில் நடைபெற்ற 2019 ரஞ்சி கோப்பையின் இறுதியாட்டத்தில் சவுராஸ்டிராவை 78 ரன்கள் வித்தியாசத்தில் தோற்கடித்து விதர்பா தொடர்ந்து 2வது முறையாக கோப்பையை வென்றது.
- ✓ இதன்மூலம் விதர்பா அணி தொடர்ந்து இரண்டாவது முறையாக கோப்பையை வெல்லும் 6வது அணி என்ற பெருமையை அடைகிறது.

2) பெண்களுக்கான 9வது சீனியர் தேசிய ஹாக்கி சாம்பியன்ஷிப் 2019 நடைபெற்ற இடம் எது?

A] பாலகாட்

B] ஹிசார்

C] ஜெய்ப்பூர்

D] நியூ டெல்லி

- ✓ பிப் 8ஆம் தேதி அன்று ஹரியானாவின் ஹிசாரில் பெண்களுக்கான 9வது சீனியர் ஹாக்கி தேசிய சாம்பியன்ஷிப் துவங்கியது. உச்ச நட்சத்திர வீரர்கள் அவரவர் சொந்த மாநிலத்திற்காக விளையாடுவர். A பிரிவின் முதல் போட்டியில் RSPB மற்றும் ஹாக்கி ராஜஸ்தான் அணிகள் மோதவுள்ளன.
- ✓ 11 நாட்கள் நடைபெறும் இத்தொடரில் 20 அணிகள் பங்கேற்கவுள்ளன. A,B,C,D ஆகிய பிரிவுகளில் முதல் 2 இடங்களை பிடிக்கும் அணிகள் பிப் 15 நடைபெறவுள்ள காலிறுதிக்கு தகுதி பெறும். அரையிறுதி மற்றும் இறுதி ஆட்டங்கள் முறையே பிப். 17, 18 தேதிகளில் நடைபெறவுள்ளன.

3) குறைந்த பந்துகளில் 50 ரன்களை கடந்த இந்திய கிரிக்கெட் வீராங்கனை யார்?

A] ஹர்மன்பிரீத் கவுர்

B] ஸ்மிரிதி மந்தனா

C] எக்தா பிஸ்த்

D] நாகராஜன் நிரஞ்சனா

- ✓ பிப் 6 அன்று வெல்லிங்டன் மைதானத்தில் நியூசிலாந்துக்கு எதிரான முதல் டி20 போட்டியில் இந்தியாவின் துவக்க வீராங்கனை ஸ்மிருதி மந்தனா 24 பந்துகளில் அரைசதத்தை கடந்து சாதனை படைத்தார்.
- ✓ இதற்கு முன் 2018ம் ஆண்டு மும்பையில் இங்கிலாந்துக்கு எதிராக அவர் அடித்த அரைசதமே இந்திய வீராங்கனை ஒருவரின் விரைவான டி20 சர்வதேச அரைசதமாகும். இப்போது அந்த சாதனையை அவரே முறியடித்துள்ளார்.
- ✓ ஸ்மிருதி மந்தானா 58 மற்றும் ஜெமிமா ரோட்ரிக்ஸ் 39 என அடித்திருந்தும் இந்திய அணி 19.1 ஓவர்களில் 136 ரன்களுக்கு சுருண்டது.
- ✓ நியூசிலாந்து மகளிர் அணி முதல் டி20 போட்டியில் இந்திய மகளிர் அணியை 23 ரன்கள் வித்தியாசத்தில் தோற்கடித்தது. சர்வதேச மகளிர் கிரிக்கெட்டில் விரைவான அரைசதம் அடித்தவர் நியூசிலாந்தின் சோப்பி டிவைன் ஆவார். இவர் 2015ஆம் ஆண்டு இந்தியாவுக்கு எதிராக 18 பந்துகளில் அரைசதம் விளாசியிருக்கிறார்.

4) Robert Bosch Center for Data Science and Artificial Intelligence (RBC-DSAI) எந்த IIT இல் நிறுவப்பட்டுள்ளது?

A] IIT மதராஸ்

B] IIT கான்பூர்

C] IIT கரக்பூர்

D] IIT பாம்பே

- ✓ The Robert Bosch Center for Data Science and Artificial Intelligence (RBC-DSAI), சமூக நலனுக்கான அறிவியல் கண்டுபிடிப்புகளை மேம்படுத்தும் நோக்கில் IIT மதராஸில் துவங்கப்பட்டது.
- ✓ RBC-DSAI ஆழ்ந்த கற்றல், கற்றலில் வலுவூட்டல்,பிணைய பகுப்பாய்வு,புரிந்துகொள்ளக்கூடிய இயந்திர கற்றல்,டொமைன் விழிப்புணர்வு போன்ற AI மற்றும் தரவு விஞ்ஞானத்தின் பல பகுதிகளில் அடிப்படை ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும்.
- ✓ IIT மதராஸ் ஜெர்மனியின் BOSCH நிறுவனத்துடன் இணைத்து இம்மையத்தை திறந்தது. BOSCH நிறுவறம் இம்மையத்திற்காக அடுத்த 5 ஆண்டுகளில் 20 கோடி(25 லட்சம் யூரோஸ்) வரை செலவிட உள்ளது.

5) 2019 அமெரிக்க சேம்பர்ஸ் சர்வதேச IP குறியீட்டில் இந்தியாவின் தரம் என்ன?

A] 52

B] 14

C] 36

D] 43

- ✓ US Champers of commerce-ன் உலகளாவிய கண்டுபிடிப்பு கொள்கை மையம் (GIPC) சமீபத்தில் தனது 2019ம் ஆண்டிற்கான சர்வதேச IP குறியீட்டை வெளியிட்டது. இதில் 50 பொருளாதாரங்களில் இந்தியா சென்ற ஆண்டை விட 8 இடங்கள் முன்னேறி 36வது இடத்தை பிடித்தது.
- ✓ இந்த முன்னேற்றம் உள்நாட்டு தொழில் முனைவோருக்கும், அந்நிய முதலீட்டாளர்களுக்கும் ஒத்த புதுமையான சூழலை உருவாக்க இந்திய கொள்கை வகுப்பாளர்களால் செயல்படுத்தப்பட்ட முக்கியமான சீர்திருத்தங்களை பிரதிபலிக்கிறது. இந்த அறிக்கை முள்ளார்ந்த சிக்கல்களிலும் கவனம் செலுத்துகிறது.
- ✓ இந்த அறிக்கையில், உரிமம் வழங்குதல் மற்றும் தொழில்நுட்ப பறிமாற்றத்தில் உள்ள தடைகள், கட்டாயமான பதிவேற்ற தேவைகள், உயிர்-மருந்துகளின் IP பாதுகாப்புக்காக வரையறுக்கப்பட்ட கட்டமைப்புகள், சர்வதேச தரத்திற்கு வெளியே காப்புரிமை தேவைகள், நீண்டகால முன்நிபந்தனை எதிர்ப்பு நடவடிக்கைகள் மற்றும் முன்னர் பயன்படுத்தப்பட்ட வணிக மற்றும் அவசரம் அல்லாத சூழ்நிலைகளில் கட்டாய உரிமம் ஆகியவை இந்தியாவின் முக்கிய பிரச்சினைகள் என குறிப்பிட்டுள்ளார்.

- ✓ காப்புரிமை, வர்த்தக முத்திரை, பதிப்புரிமை மற்றும் வணிக இரகசியங்களின் பாதுகாப்பு உள்ளடக்கிய 45 குறியீடுகளை அடிப்படையாக கொண்டே இத்தரவரிசை தயார்செய்யப்படுகிறது.

6) India Heritage Walk Festival (IHWF-2019) சஹபீடியாவால் எந்த சர்வதேச அமைப்புடன் இணைந்து நடத்தப்பட்டது?

A] ILO

B] UNESCO

C] UNICEF

D] FAO

- ✓ பிப் 2ம் தேதி முதல் ஒரு மாதத்திற்கு இந்தியாவின் 37 நகரங்களில் 2வது இந்திய பாரம்பரிய நடை விழா (IHWF-2019) நடைபெறவுள்ளது. இவ்விழாவை சஹபீடியா நிறுவனம் UNESCO வுடன் இணைந்து நடத்துகிறது. National Mineral Development Corporation (NMDC) இவ்விழாவை ஆதரிக்கிறது.
- ✓ இந்த திருவிழா வரலாற்றில் கூறப்படும் மறைக்கப்பட்ட கற்களை கண்டுபிடிக்க வழிவகுக்கிறது. இந்தியாவின் உறுதியான மற்றும் உறுதியற்ற பாரம்பரியத்தின் பல்வேறு அம்சங்களை அணுகுவதே இவ்விழாவின் பிரதான நோக்கமாகும்.
- ✓ 87 மரபு வழிகளிலும், 100 க்கும் மேற்பட்ட தடகள நிகழ்வுகளிலும், இந்த நிகழ்வானது, இந்தியாவின் கலாச்சாரக் களஞ்சியத்தை ஆராய்வதுடன், அருங்காட்சியகங்கள், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச்சின்னங்கள், இயற்கை வனப்புடைய நிலங்கள், உயர்ந்த உணவுகளுக்காக அறியப்படும் இடங்கள் மற்றும் பெண்கள் சார்ந்த தகவல்களில் வேரூன்றி இருக்கும் இடங்கள் போன்றவற்றிலும் கவனம் செலுத்துகிறது.
- ✓ இம்முறை, சஹபீடியா 40க்கும் மேற்பட்ட உள்ளூர் பங்காளர்களுடன் இணைந்து இந்தியா கலாச்சார நடை விழாவை நடத்தி வருகிறது. அவர்கள் கேரளாவின் வரலாற்று அருங்காட்சியகம், கொச்சி ஹெரிடேஜ் திட்டம்,
- ✓ INTACH ஸ்ரீநகர் அத்தியாயம், ஆர்ட் டெகோ மும்பை, மேவார் மஹாராணா அறக்கட்டளை மற்றும் ஆக்ஸ்போர்டு புக்ஸ்டோர் ஆகியவற்றை உள்ளடக்கி உள்ளனர்.

7) 2019 ஆசிய LPG மாநாட்டின் கருப்பொருள் என்ன?

Winmeen.com

A] LPG – Safe for Life

B] LPG – Energy for Life

C] LPG – Spirit for Life

D] LPG – Reliable for Life

- ✓ இரண்டாம் ஆசிய LPG மாநாடு 2019 நியூ டெல்லியில் LPG – Energy for Life என்ற கருப்பொருளுடன் நடைபெற்றது.
- ✓ இந்த மாநாடு World LPG Association (WLPGA) ஆல் Indian oil, ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் மற்றும் பாரத் பெட்ரோலியம் போன்ற இந்திய பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்களுடன் (OMCs) இணைந்து நடத்தப்பட்டது.
- ✓ மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான் இந்தியா உலகிலேயே இரண்டாவது மிகப்பெரிய LPG இறக்குமதி செய்யும் நாடாக வளர்ந்துள்ளது எனக்கூறினார். இதற்கு முக்கிய காரணம் பாரம்பரிய எரிபொருள்களான மரக்கட்டைகள் மற்றும் மாட்டு சாணங்களுக்கு பதிலாக அரசு LPG ஐ மாற்று எரிபொருளாக தருவது எனக்குறிப்பிட்டார்.
- ✓ கடந்த ஐந்து ஆண்டுகளில் LPG இறக்குமதி 12.5% அதிகரித்து, 2018-19 ஆம் ஆண்டு 12 மில்லியன் மெட்ரிக் டன்களை (13 மில்லியன் டன்) தொட்டது.
- ✓ ஆகவே, LPG இறக்குமதியை பொறுத்தவரை, இந்தியா ஜப்பானை கடந்து 2 வது இடத்தை பெற்றுள்ளது. சைனா முதலிடத்தில் உள்ளது. சவுதி அரேபியா, கத்தார், ஐக்கிய அரபு அமீரகம், குவைத் மற்றும் ஈரான் போன்ற நாடுகளில் இருந்து இந்தியா LPG இறக்குமதி செய்கிறது.
- ✓ இந்த மாநாடு மூலம் உலகளாவிய LPG தொழில்துறைக்கு தொழில் மேம்பாட்டு முகவர், தொண்டு நிறுவனங்கள் மற்றும் இலாப நோக்கற்ற நிறுவனங்களுடன் கலந்துரையாடும் வாய்ப்பு கிடைத்தது.

8) அண்மையில் செய்திகளில் வெளியான Dard ஆரிய பழங்குடியினர், எந்த மாநிலம்/யூனியன் பிரதேசம்-ஐ சேர்ந்தது?

A] அருணாச்சல பிரதேசம்

B] ஜம்மு காஷ்மீர்

C] ஜார்க்கண்ட்



Winmeen.com

D] இமாச்சல பிரதேசம்

- ✓ ஜம்மு காஷ்மீரின் லடாக் பகுதியில் Dard ஆரிய பழங்குடி மக்கள் அவர்களின் தாராளமான ஆடை பழக்கவழக்கங்களுக்கு புகழ்பெற்றவர்கள். ஆனால் கலாச்சார மரபு காரணங்களால் அலங்கார ஆடைகளை துடிப்பாக வைக்க போராடி வருகின்றனர்.
- ✓ சமீபத்தில் டெல்லியில் நடந்த 2019 டார்ட் ஆரிய விழாவில் (Aryan Utsav), இவ்விடயத்தில் மத்திய அரசு கடுமையான தலையீடுகள் செய்யும்படி டார்ட் ஆரியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். ஆரியர்களின் உயர்ந்த கலாச்சாரம் 'Pure Aryan Race' ன் வம்சாவளிகளால் மட்டுமே காக்கப்படும் நம்பப்படுகிறது. இப்போது அது விரைவான நவீனமயமாக்கல், இடம்பெயர்தல் மற்றும் மதமாற்றம் போன்றவற்றால் அச்சுறுத்தலுக்கு ஆளாகியுள்ளது. தார்ட் ஆரியர்கள் லே, கார்கில் மாவட்டங்களில் உள்ள தஹா, ஹனு, பீமா, தர்சிக் மற்றும் கர்கோன் கிராமங்களில் வாழ்கின்றனர்.
- ✓ அந்த கிராமங்கள் இணைந்து ஆரிய பள்ளத்தாக்கு என அழைக்கப்படுகிறது.
- ✓ இந்த பகுதியில் உள்ள மக்கள் ஒத்த உடல்அம்சங்கள், சமூக வாழ்க்கை, இன கலாச்சாரம் மற்றும் மொழியியலை கொண்டுள்ளனர்.
- ✓ Brokpas மற்றும் லடாக் ஆரியர்கள்  அலெக்சாண்டரின் ராணுவப் படை வீரர்களாய் இருந்ததாக பல ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர். இவர்கள் 2000 ஆண்டுகளுக்கு முன்பு இப்பகுதிக்கு வந்ததாக கூறப்படுகிறது. Dard எனும் வார்த்தை 'Daradas' எனும் சமஸ்கிருத வார்த்தையில் இருந்து பிரிக்கபட்டதாகும்.

9) கல்கத்தா உயர்நீதி மன்றத்தின் தற்காலிக கிளை தீர்ப்பாயம் மேற்கு வங்கத்தின் எந்த மாவட்டத்தில் அமைக்கப்பட உள்ளது?

A] மால்டா

B] ஹூக்ளி

C] டார்ஜிலிங்

D] ஜல்பைகுரி

- ✓ சமீபத்தில் மத்திய அமைச்சரவை கல்கத்தா உயர்நீதிமன்றத்தின் தற்காலிக கிளை தீர்ப்பாயம் மேற்குவங்கத்தின்  ஜல்பைகுரி மாவட்டத்தில் நிறுவ ஒப்புதல் அளித்துள்ளது.

- ✓ டார்ஜிலிங், கலிம்போக், ஜல்பைகுரி மற்றும் கூச் பெகார் ஆகிய நான்கு மாவட்டங்களில் உள்ள வழக்குகளை இந்த தீர்ப்பாயம் நடத்தும். இந்த முடிவுக்கு பின் 1988ல் நடந்த கல்கத்தா உயர்நீதிமன்ற சந்திப்பில் போடப்பட்ட ஒப்பந்தம் உள்ளது. மத்திய அமைச்சரவையும் ஜீன் 2006 இல் அதற்கு ஒப்புதல் அளித்தது.
- ✓ தற்காலிக கிளை தீர்ப்பாயம் என்பது நீதிமன்றத்திற்கு தொலைதூரத்தில் இருக்கும் குறிப்பிட்ட மாவட்டங்களுக்கு மட்டுமே ஆகும். ஆனால் நிரந்தர தீர்ப்பாயம் போல அதிக வழக்குகளை எடுத்து நடத்த மாட்டார்கள்.
- ✓ இந்தியாவின் பழமை வாய்ந்த உயர்நீதிமன்றம் கல்கத்தா உயர் நீதிமன்றம் ஆகும். இது மேற்கு வங்க மாநிலத்திலும், அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள் ஒன்றிய பகுதியிலும் சட்ட அதிகாரம் கொண்டது. உயர் நீதிமன்ற கட்டிடத்தின் வடிவமைப்பு துணி மண்டபத்தை அடிப்படையாகக் கொண்டது, பெல்ஜியத்தில் Ypres ஆகும்.

10) இந்திய கடற்படையின் எந்த போர் கப்பல் பன்னாட்டு கடல்சார் பயிற்சி "Cutlass Express 2019' -ல் பங்கேற்றது?

A] INS தல்வார்

B] INS த்ரிசுல்

C] INS ட்ரைகண்ட்

D] INS தர்காஷ்

- ✓ INS ட்ரைகண்ட் (F51), இந்திய கடற்படையின் ஒரு தல்வார் வகுப்பு போர்க்கப்பல், பன்னாட்டு கடல் பயிற்சியான 8வது 'Cutlass Express 2019'ல் பங்கேற்றது.
- ✓ INS ட்ரைக்கண்ட் கேப்டன் ஸ்ரீனிவாசன் மடுல்லாவால் தலைமையில் இயக்கப்பட்டது. காற்று,மேற்பரப்பு மற்றும் நிலப்பரப்பு ஆகிய மூன்று பரிணாமங்களிலும் வரும் ஆபத்துகளை கணிக்கும் வகையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. டிஜிபவுட்டி, மொசாம்பிக் மற்றும் செய்செல்ஸ் ஆகிய இடங்களில் இப்பயிற்சி 27 ஜனவரி முதல் 06 பிப்ரவரி வரை நடைபெற்றது.
- ✓ சட்டத்தின் அமலாக்கத் திறனை மேம்படுத்துதல், பிராந்திய பாதுகாப்பு மற்றும் பங்கேற்கும் நாடுகளின் இராணுவப் படைகளுக்கு இடையிலான செயல்திறன் மேம்படுத்துதல் ஆகியவை இப்பயிற்சியின் நோக்கமாகும்.

- ✓ கனடா, கொமோரோஸ், டிஜிபவுட்டி, பிரான்ஸ், இந்தியா, கென்யா, மடகாஸ்கர், மொரிஷியஸ், மொசாம்பிக், போர்ச்சுகள், செய்ச்சல்ஸ், சோமாலியா, தன்சானியா, நொதர்லாந்து மற்றும் அமெரிக்கா ஆகிய 15 நாடுகள் இப்பயிற்சியில் கலந்து கொண்டன.

winmeen.com